**செய்தி வெளியீடு எண்.87** **நாள்.28.07.2021**

**வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கு திட்டம் (UYEGP)**

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்கி வேலைவாய்ப்பினை பெறும் பொருட்டு **படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்** (UYEGP) **தமிழக அரசால்** உருவாக்கப்பட்டு தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கும் மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021–22ம் ஆண்டிற்கு சென்னை மாவட்டத்திற்கு 285 பயனாளிகளுக்கு ரூ.180.00 இலட்சம் மானியமாக இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**கடன் பெற தேவையான தகுதிகள்.**

1. குறைந்தபட்ச கல்வித் தகுதி : 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
2. வயது வரம்பு : குறைந்த பட்சம் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.
   அதிகபட்சம் பொதுபிரிவினர் 35 வயதுக்குள்இருக்க வேண்டும்
   இதர பிரிவினர்/பெண்கள்/ ஊனமுற்றோர்/முன்னாள் இராணுவத்தினர் 45 வயதுக்குள் இருக்க வேண்டும்.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.5,00,000/க்கு மிகாமல் இருக்க வேண்டும்
4. முன்னுரிமை : பெண்கள், சிறுபான்மையினர், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்படும்.

**அதிகபட்ச கடன் தொகை..**

உற்பத்தி தொடர்பான தொழில்களுக்கு ரூ.15.00 இலட்சம், சேவை தொடர்பான தொழில்களுக்கு ரூ.5.00 இலட்சமும், வியாபாரம் தொடர்பான தொழில்களுக்கு ரூ.5.00 இலட்சமும் கடன் தொகையாக வழங்கப்படுகிறது.

இதில் திட்ட அறிக்கையில் 10 % தொகையினை பொதுப்பிரிவினர் விளிம்புத் தொகையாக செலுத்தவேண்டும். தாழ்த்தப்பட்டவர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சிறுபான்மையினர்/பெண்கள்/முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள்/திருநங்கைகள் ஆகியோர் 5% விளிம்புத்தொகையாக செலுத்தினால் போதுமானது.

இத்திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீட்டில் 25% மான்யமாக அதாவது அதிகபட்சம் ரூ.2,50,000/– வழங்கப்படுகிறது.

**கடன் வழங்கப்படும் தொழில்கள்..**

இலாபகரமான அனைத்து விதமான உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களுக்கு (நேரடி விவசாயம் தவிர) கடன் வழங்கப்படுகிறது.

இக்கடன் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க ஆர்வமுள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். மேலும் COVID-19 காரணமாக நேர்முகத்தேர்வின்றி தகுதியான விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

மேலும் விவரங்களுக்கு மண்டல இணை இயக்குநர், தொழில் வணிகத் துறை, கிண்டி, சென்னை –32 அவர்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 044 – 22501621 மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**